[1975 மார்ச் 27

Kadayal Government High School

*461Q.—THIRU J. JAMES.: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government for vocationalisation of Secondary Education in the Kadayal Government High School in Kanyakumari district ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) அத்தகைய கோரிக்கை ஏதும் அரசின் ஆய்வில் இல்லை. எனினும் கடையல் அருகே ரப்பர் தோட்டங்கள் பல உள்ளமையால் அப்பள்ளியில் ரப்பர் தொழிலியல் பற்றிய பயிற்சி வகுப்பொன்றைத் தொடங்க இயலுமா என்பதை ஆய்வு செய்து, இயலுமாயின் அரசுக்குக் கோரிக்கை அனுப்புவதாகப் பள்ளிக் கல்வி இயக்குநர் கூறியுள்ளார்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அந்த மாவட்டத்தில் இதுவரையில் எந்த உயர்நிலைப்பள்ளியிலும் தொழில் கல்வி ஏற்படுத்தப்படவில்லை. ஆகவே இந்தப் பள்ளியில் அதிகக் கால தாமதமன்னியில் தொழில் பயிற்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து இதுபற்றிய முழு விவரங்கள் கேட்கப் பட்டிருக்கின்றன. ரப்பர் தொழிலியல் பற்றிய பயிற்சி அந்தப் பள்ளியில் துவங்க இயலுமா என்பதைப் பற்றியும் அதுபற்றியிருக்கும் கூறுபாடுகளையும் கேட்டிருக்கிறோம். அதுபற்றிய முழு விவரக்குறிப்பு வந்த பிறகு அதன் மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, எந்த அடிப்படையில் இந்தப் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன ? இருக்கின்ற பள்ளிகளிலேயே இந்த வகுப்புக்களை ஆரம்பிக்கலாமா என்பதை அறிவதோடு, கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுவாக சில பள்ளிகளில் ஏற்படுத்தவோ அல்லது இருக்கிற பள்ளிகளிலேயே இந்த வகுப்புகளை ஏற்படுத்தவோ அரசு முடிவு எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எந்தெந்தப் பள்ளிகளில் என்னென்ன வசதிக்கு சூழ்நிலை இடம் தருகிறதோ, அந்தந்த வகையில் அந்தந்தப் பள்ளிகளில் ஏற்படுத்துவதுதான் அரசின் நோக்கம். ஏற்கனவே இந்த வகையில் 200 பள்ளிகளில் காம்ப்ரஹென்சிவ் அடிப்படையில் அங்கீகாரம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த முறையில் சென்ற ஆண்டு 18 பள்ளிகளைத்தான் எடுத்தோம். ஆகவே அந்த முறையில்தான் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.